உ

சிவமயம்

தேவஸ்தான வெளியீடு-1.

# திருக்குடமூக்குத் தல வரலாறு.

குடந்தை

சைவசித்தாந்த சமயபோதகர் திருவாளர்

வித்வான், த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

அவர்களால் எழுதுவிக்கப் பெற்றது.

திருவாளர்

D. சொக்கலிங்க செட்டியாரவர்கள், B.A., B.L.

மானேஜிங் டிரஸ்டி.

முதல் பதிப்பு] 1947-ஜூன். [விலை அணா 2

திருவாளர் D. சொக்கலிங்க செட்டியார் அவர்கள்

,, S. சுப்பிரமணிய முதலியார் ,,

,, கோபு S. சாமிநாத செட்டியார் ,,

டிரஸ்டிகள்.

,, P.M. முத்துமல்லா ரெட்டியார் அவர்கள்

மானேஜர்.

உ

சிவமயம்

# முகவுரை

'திருக்குடமூக்குத் தல வரலாறு' என்னும் இவ் வெளியீடு ஸ்ரீ ஆதி கும்பேசுவரசுவாமி தேவஸ்தானத்து முதல் வெளியீடாக வருகிறது. இதனை 1945-ஆம் மகாமக காலத்திலேயே அப்போதைய மானேஜிங் டிரஸ்டி திருவாளர் S. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் H.R.E. போர்டாரின் அங்கீகாரம்பெற்று, பேப்பர் கண்ட்ரோலரின் அனுமதியின்பேரில் வேண்டிய பேப்பர்களை வரவழைத்தபின் குறுகிய காலத்தில் அச்சிட முடியாததால் வெளியீடு நின்றுவிட்டது. எனினும் இது வெளி வரும் விஷயத்தில் தற்போதைய மானேஜிங் டிரஸ்டி திருவாளர் D. சொக்கலிங்க செட்டியார் B. A., B. L. அவர்களுடைய பெருமுயற்சி பாராட்டத்தக்கது. இத் தல வரலாற்றைச் சுருக்கமாக எழுதித்தர வேண்டுமென என்னை ஆலய நிர்வாகிகள் வேண்டினர். இடையீடில்லாத என்னுடைய சொந்த அலுவல்களினிடையே இதனை ஒருவாறு எழுதினேன். பின்பு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிவாசி, சுவாமிநாதத்தம்பிரான் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர்களாக இருந்து இக்குடந்தை நகர் பண்ணிய புண்ணியப் பயனாய் இரண்டு ஆண்டுகட்கு மேலாக இந் நகரையே உறைவிடமாகக் கொண்டு உலையா ஊக்கத்

துடன் நாடோறும் சைவசித்தாந்த சமயபோதனை செய்து வருபவர்களும், பல நன் மாணவர்கட்குத் தமிழ்க் கல்வி கற்பித்து வருபவர்களும், கற்றோர் பலருக்கு உசாத் துணையாக விருந்து வருபவர்களும், இந்த ஆதி கும்பேசுவரசுவாமி ஆலயத்து ஸ்ரீ மங்களாம்பிகா நூல் நிலயத்தில் நாடோறும் புராணப் பிரசங்கம் செய்யத் தொடங்கி அருணஜல புராணம், திருவாதவூரடிகள் புராணம், சிவரகசியம், கந்த புராணம் முதலிய நூல்களைச் சிறந்த முறையில் புராணபடனமாகச் செய்து பல நன்மக்களைச் சைவச் செந்நெறியில் ஒழுகுமாறு வற்புறுத்தி வருபவர்களும், 'கோடீச்சுரக் கோயில்' என்னும் கொட்டையூர்த் தலவரலாற்றை எழுதியுபகரித்தவர்களும் ஆகிய உயர் சைவத் திருவாளர், வித்வான், த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்து, இதனைக் கொடுத்து 'எளிய இனிய சிறு சிறு வாக்கியங்களில் அமைத்தெழுதித்தருக' எனச் சொன்னவுடன் அப்பணியை மிகமிக மகிழ்வுடன் ஏற்று இந்த உருவத்தில் விரைந்து எழுதித்தந்தார்கள். இக் குடமுக்குத்தல வரலாறு அன்பர்கள் பலர்க்கும் படிக்கப்படிக்க இன்பமூட்டும் என்பதொருதலை. இதனை எளிய இனிய நடையில் எழுதிச் சுருக்கமாக உபகரித்த பிள்ளையவர்களுக்கு இச் சைவ வுலகமும், தமிழுலகமும் மிகக் கடப்பாடுடையது. இது போன்ற சைவப் பணிகளை மேலும் மேலும் ஆற்றுமாறு ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஆதிகும்பேசுவரப் பெருமான் அவர்கட்குத் திருவருள் புரிக.

இங்ஙனம்,

குடந்தை. ⎫ (Sd.) ப. தி. சோ. குமாரசாமி செட்டியார்
ஜூன், 1947 ⎭ காசுக்கடை.



கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத
ஸ்ரீ ஆதிகும்பேசுவரர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருக்குட மூக்குத் தல வரலாறு

## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் தேவாரம்

திருச்சிற்றம்பலம் பண்-பஞ்சமம்

அரவிரி கோடனீட லணிகாவிரி யாற் றயலே
மரவிரி போது மௌவன் மணமல்லிகை கள்ளவிழுங்
குரவிரி சோலை சூழ்ந்த குழகன் குடமூக் கிடமா
விரவிரி திங்கள் சூடி யிருந்தானவ னெம் மிறையே,

திருச்சிற்றம்பலம்

திருக்குட மூக்கு என்னும் இக்குடந்தையாகிய கும்பகோணம் சோழநாட்டில் உள்ளது. நீர்வளம் நிலவளம் மிக்கது. தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சிவதலங்களுள் ஒன்று. சோழநாட்டுச் சிவதலங்கள்—190; அவற்றுள் காவிரியின் தென்பால் உள்ளன—127. அவைகளுள் ஒன்ருகிய இக்கும்பகோண நகரில் திருக்குடமூக்கு, குடந்தைக் கீழ்க் கோட்டம், குடந்தைக்காரோணம் என்பன திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் இவர்களுடைய திருப்பதிகம் பெற்றுள. மற்றும், சோமேசம், கௌதமேசம், அபிமுகேசம், முதலிய பல சிவாலயங்களும் உள. ஆழ்வார்கள்,

மங்களா சாசனம் செய்துள்ள ஸ்ரீ சாரங்கபாணி ஸ்ரீ சக்கரபாணி என்னும் திருமால் கோயில்களும் மற்றும் பல விஷ்ணு ஆலயங்களும் உள்ளன.

இந்நகரின் பரப்பளவு ஏறக்குறைய நான்கு சதுர மைல். இந்நகருக்கு வடபால் காவிரியும், தென்பால் அரிசிலும் ஆகிய இரு நதிகள் மாலையணிந்தது போல விளங்குவன. அரசியலார் ஆங்கிலக் கல்லூரியும், நான்கு உயர்தரப் பள்ளிகளும், ஒரு உயர்தரப் பெண்கள் பள்ளியும், பல தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. உலகத்தில் பிரசித்தி பெற்றுள்ள பல பேரறிஞர்கள் இந்நகர்க் கல்லூரியின் மாணவர்கள். இங்குள்ள கல்லூரியைத் 'தென்னிந்திய கேம்பிரிட்ஜ்' என்பர். மருத்துவசாலைகள் பல உள. பெண் பாலருக்குத் தனி வசதிகளுள்ள மருத்துவசாலையும், மருத்துவ விடுதிகளும் இருக்கின்றன. திருவாவடுதுறை, தருமபுரம் ஆதீனங்களுக்குச் சொந்தமான கிளை மடங்கள் பேட்டை நாணயக்காரத்தெரு வடக்கு வீதியில் இருக்கின்றன. அவை நல்ல கண்காணிப்பின்றி இக்காலத்துச் சிதைவுற்றுள்ளன. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மடமும், வீரசைவ மடமாகிய பெரிய மடம் என்று வழங்கப்படும் ஸ்ரீ சாரங்க தேவர்*மடமும், வைணவ மடங்களின் கிளை மடங்களும் திருவண்ணாமலை ஆதீனத்துக் கிளை மடமும், திருப்பனந்தாட் காசி மடத்துக்குச் சொந்தமான கட்டிடமும் உள்ளன.

பொன், வெள்ளி, செம்பு, ஈயம், பித்தளை முதலிய உலோகங்களால் செய்யப்பெறும் நகை, பாத்திரம் முதலியன மிக வேலைப்பாட்டுடன் இங்கே கிடைக்கும். ஆங்கில ஆட்சிக்குட்பட்டது.

திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், தாரேச்சுரம். சுவாமிமலை, பாடலவனம் என்னும் பஞ்சக் குரோசத் தலங்கள் இதனைச் சூழ்ந்துள. பதினெண் குரோசத் தலங்களும் உள. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய மூர்க்க நாயனார் இத்தலத்திருந்து ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரப் பெருமானை வழிபட்டும் மாகேசுர பூசை செய்தும் முத்தியடைந்தனர்.

இத்தலத்தைப் பற்றிய புராணங்கள் மூன்றுள. அவற்றால் இத்தலத்தைப்பற்றிய செய்திகள் அறியலாம்.

## ஸ்ரீ ஆதி கும்பேசர் வரலாறு.

திருமால் திருவுந்தித் தாமரையில்தோன்றிய பிரமன் படைப்புக் கடவுள். அவர் ஒரு காலத்தில் தினகற்பம் வருவதைச் சிந்தித்தார். துன்பங்களை யெல்லாம் துடைத்து இன்பத்தை ஊட்டவல்ல சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கயிலாச மலையை அடைந்தார். அங்கே திருநந்தி தேவரை வணங்கினார், விடை பெற்றார்; உள்ளே சென்றார்; நாக்குழற, மெய்ம்மயிர் பொடிப்ப, கண்ணீர் அருவி சொரிய, பன்முறை பஞ்சாங்க அட்டாங்க வணக்கம் புரிந்தார்; சிரமிசைக் கரங் குவித்தார்; துதித்தார். மலர் மகன் வழிபாட்டை ஏற்றுச் சிவபெருமான் கருணைகொண்டார். சிவபெருமான் பிரமதேவரைப் பார்த்து உன் வேண்டுகோள் யாது என்றார். அவர் அடியற்ற மரம்போல் சிவபெருமான் அடிகளில் வீழ்ந்து எழுந்து வணங்கி நின்றார். 'எம்பெருமானே! முழு முதற்கடவுளே! தினகற்பம் வருங்காலம் கிட்டியதே. உலகம் முற்றும் அழியுமே. வேதங்கள் அழியுமே. தேவரீர் முன்னம் அருளிய சிருஷ்டி பீஜங்கள் தொலைவுறுமே. இனி எவ்வாறு படைப்பேன்? இவை

களே எளியேன் விண்ணப்பம்' எனப் பணிவுடன் விண்ணப்பித்தார். சிவபெருமான் பிரமதேவர் செய்த விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்றார். பிரமனை நோக்கினார். சரக்கறை போன்ற உனக்கு நாம் அருளிய அவ்வித்து, படைப்புக் கடவுளாகிய நீயும், காத்தற் கடவுளாம் திருமாலும் அழியினும் அழிவுறாது. அது அழியாததாயினும் உன் கையை விட்டு அகலாமல் அதனைப் பாதுகாத்தலும் வேண்டும். அதனைக் காக்கு மாற்றையும் கேட்பாய். 'அமுதத்தையும் மண்ணையும் பிசைந்து மாயமயமாகிய குடம் ஒன்றைச் செய். அக் குடத்தினுள் அமுதத்தை நிரப்புக. அதன் நடுவில் நாம் அருளிய சிருஷ்டி பீஜத்தை வை. அதன் நாலா பக்கமும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் இவைகளைப் பரப்புக. அக்குடத்தின் வாயில் தேங்காய், மாவிலை, பூணூல் இவைகளை நன்றாகப் பொருத்துக. மேருமலையில் உள்ள கோயிலின் பக்கத்தில் உறி யொன்றில் அக் குடத்தை வை. தருப்பை முடிச்சும் அதில் சேர்த்துக. அமுதத்தால் தெளி. வில்வத் தளிர்களைத் தூவுக. சிலநாள் அங்கிருக்க. வெள்ளம் மூடும். உலகம் செழிக்க வேண்டும் காரணத்தால் அக்குடம் வெள்ளத்தில் மிதக்கும். தெற்குத்திசை நோக்கி நெடுந்தூரம் செல்லும். சென்று தன் விருப்பப்படி ஓர் இடத்தில் தருப்பை விழும். நமது ஆணையால் சத்த மாதர்கள் அதனைக் காவல் புரிவர். கூர்ச்சம் சிவக் குறியாம். அங்கிருந்து அக்குடம் சென்று வாயுதிசையில் ஒரு சமமான இடத்தில் தங்கும். நாமே ஒரு வேட்டுவ உருவக் கொண்டு அங்கே செல்வோம். அக்குடத்தை ஒரு அம்பினால் சிதையும்படி செய்வோம். அதிலுள்ள

அமுதம் பரவி நாலாபக்கமும் ஐந்து குரோச எல்லைவரை நனைக்கும். அக்கும்பத்தின் கீழ்ப்புறத்தில் ஒரு தீர்த்தம் அமைப்போம். அத்தீர்த்தத்தின் கீழ்பால் அச்*சிக்கம் சென்று சிவலிங்கமாம். அது போலவே அக்குடத்தில் உள்ள வில்வம் முதலியனவும் வெவ்வேறு இடங்களில் பொருந்தும். அவைகளும் ஒளிமிக்க இலிங்கமாம். இவை நிகழும் முன்னமே நாமே கும்பத்துள் வெண்மணலை நிறையச் சேர்ப்போம். சிறந்த இலிங்கமாக்குவோம். உயிர்கள் எல்லாம் பூசித்து உய்ய நாமே அந்த இலிங்கத்தைப் பூசித்துக் காட்டுவோம். அவ்விலிங்கத்துட் சென்று தங்குவோம். எக் காலத்திலும் இந்த இலிங்கத்தைப் பூசித்து யாவரும் எண்ணிய எண்ணியாங்கு நலம் பெறுவர். நீயோ வாளா இருப்பவன், நாம் உரைத்த இவைகளையெல்லாம் மனத்திற் கொள்க. நின்பதி சேர்க' எனப்பிரமதேவருக்கு விடை கொடுத்து அனுப்பினார். அவ்வாறே பிரமதேவர் சென்று செய்து சிவபெருமான் திருவருளை நோக்கி யிருந்தனர்.

இறைவன் முன்பு அருளிய வண்ணமே கடல்கள் ஏழும் ஒன்றாய்க் கலந்தன. உலக முழுவதும் வெள்ளத்தால் முழுகியது. ஊழிப் பெரு வெள்ளம் தோன்றவே ஊழிக் காற்றும் ஒருங்கு சேர்ந்தது. அக்காலத்தில் சூரிய சந்திரர்கள் இல்லை. திக்கில்லை. தாவர சங்கமப் பொருள்கள் யாவும் இல ஆயின. நீர்மயம் ஒன்றே விளங்கியது. மேருமலையும் முழுகியது. குடம் அசைந்தது. மாயாமயமான குடமும், தருப்பையும், உறியும் வெள்ளத்தில் மிதந்தன. காற்று மோத தென் திசை சென்ற அக் குடத்திலிருந்த மாவிலை தருப்பை

*சிக்கம் - உறி.

முடிச்சுக்கள் கீழே விழுந்தன. மாவிலை வன்னிமரம் ஆயிற்று. தருப்பை முடிச்சு அங்கிழலில் இலிங்க வடிவாயிற்று. அதனை மாதரெழுவரும் இறைவன் ஆணைப்படி காத்திருந்தனர். அது தருப்பை இலிங்கம் என்னும் பெயரைப் பெற்றது. அந்த இலிங்கத்தின் வாயுத் திசையிலே ஒரு குரோச அளவில் அவ்வமுத கும்பம் சென்று தங்கியது. இத்தலமே சிறந்தது என இறைவர் அருளால் ஆகாயத்தில் ஒலியுண்டாயிற்று. மலர் மழை பொழிந்தது. தூய வெண்ணீறும் கண்மணியும் ஐந்தெழுத்துமே பொருள் எனக் கொண்டு போற்றும் புண்ணியத் தொண்டர் தம் பிறவி யொழிவது போல வெள்ளமும் நீங்கியது. மலர் மகன் வியப்புற்றான். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான். கூத்தும் ஆடினான்.

இங்ஙனமாக, அமுத கும்பம் இருந்த அவ்வுறி கிழக்கே சென்று ஓர் அருட்குறியாயிற்று. அதிலிருந்த தேங்காய் தென் கீழ்த்திசை நோக்கிச் சென்று சிவலிங்கமாயிற்று. வில்வத்தளிர்கள் கிழக்கில் வில்வ மரங்கள் ஆயின. பாதாள லிங்கேசர் அங்கே தோன்றியருளினர். குடத்தில் சாத்திய பூணூல் சிறிது மேல் புறம் அடைந்து சிவலிங்க வடிவாயது. சூத்திர நாதர் என்னும் பெயரும் பெற்றது. இத்தகைய சிறந்த அமுத கும்பத்தைக் காணச் சிவபிரான் திருவுளங் கொண்டார். வேட்டுவ வடிவம் பெற்றார். வேட்டுவ வீரராய்ச் சிவகணங்கள் அவர்பின் தொடர்ந்தன. அனைவரும் சோழநாட்டை அடைந்தனர். திருவிடைமருதூரின் கீழ் எல்லையைச் சார்ந்தனர். சிவபிரான் கணங்களை நோக்கினர். இக் குடத்தில் உள்ள அமுதம் எங்கும் வழிந்தொழுகச் செய்வோம் என்றார். அவ்வீரருள் சாத்தன் என்பவன் வேடர் தலைவனை

வணங்கினான். இது மிகவும் உலகுக்கு உபகாரமாம் என விண்ணப்பித்தான். கூரிய அம்பு ஒன்றைத் தேர்ந்து எடுத்தான். அவர் திருக்கரத்தில் உதவினான். அவர் சாத்தனை விளித்தார். "ஐய! இவ்வம்பினால் இம் மாயாமய அமுத கும்பம் சிதைவுறாது என்றார். அம்பை விடுத்தார், அது பயனிலதாயிற்று; சாத்தான் வெட்கினான். இன்று முதல் நீ ஏக பாண சாத்தன் என்னும் பெயருடன் இங்கு உறைக. இவ்விடமும் பாணதுறை என்னும் பெயர் பெற்று விளங்குக என அருளினார். மேல்பால் சிறிது தூரம் சென்றார். அக் குடத்தின் ஈசான திக்கில் நின்றார். தம் அம்பறாத்தூணியிலிருந்து எடுத்த அம்பொன்றை விடுத்தார். அது விரைந்து சென்றது. குடத்தின் மூக்கைச் சிதைத்தது. குடம் கவிழ்ந்தது. சிதைந்த மூக்கு மேலெழுந்தது. தென் கீழ்த் திசை சென்றது. ஒரு யோசனை தூரத்தில் விழுந்தது. ஓர் இலிங்க வடிவாயிற்று. அவ்விடத்தையே குடவாயில் என்பர். சிவ பெருமான் இங்கே கோணேசர் என்னும் திருநாமத்துடன் விளங்குகின்றார். குடமூக்கின் வழியே வழிந்த அமுதமானது நாற்புறத்தும் பாவியது. ஐங்குரோச எல்லை நனைத்தது. அம்பு விடுத்த இடமும் பாணபுரி எனப் பெயர் பெற்றது. இறைவராகிய வேட்டுவன் அமுத கும்பத்தை நோக்கி நடந்தார். அமுத கும்பத்தை நோக்கி நடந்தருளும் கிராதனார் கிழக்கிலும், தென்கீழ்த்திசையிலும் அவ்வமுதம் என்றும் தேங்கி இருப்பதாகுக என எண்ணினார். அவ்வாறே அமுதம் தேங்குமாறு பூமி விரிந்து இடந்தந்தது. அதனையே அமுதவாவி என்பர். கொடும்பாவிகள் ஆயினும் அமுதவாவியில் மூழ்கினோர் தூயோராகுக என வரமுந்

தந்தனர். அவ்வேட்டுவ வேடர் பின்பு அமுத கும்பத்தை அணுகினர். அமுதத்தால் நனைந்த வெண்மணல் முழுவதையும் வாரினர். கும்பத்துட் சேர்த்தார். இலிங்க வடிவாக்கினர். பூசித்தனர். அவ்விலிங்க வடிவத்தில் தானே வேட்டுவ உருக்கரந்தார். பேரொளிப் பிழம்பாய் அவ்விலிங்கம் தோன்றியது. குடமூக்கின் வழியே அமுதம் வழிந்து ஒழுகி நாற்புறத்தும் ஐந்து குரோச எல்லையை நனைத்த காரணத்தால் அந்த இடம் குடமூக்கு என்னுங் காரணப் பெயர் பெற்றது. உலகுக்கு ஆதி காரணம் ஆகிய பராபரன் குடத்து உதித்த காரணத்தால் ஆதி கும்பேசர் எனப் பெயர் பெற்றார். எம்மை யாளுடைய பிராட்டியாரும் எம்பிரான் கயிலையினின்று நீங்கிக் குடமூக்கை அடைந்து எழுந்தருளியிருப்பது அறிந்து, அங்கு விரைந்து வந்து இறைவனை வணங்கிப் போற்றினர். வழிபட்டார். இறைவர் அருள்கொண்டு அம்மையாரை நோக்கி 'எமது இடப் 'பாலில் என்று மிருந்து தொழுவார்க் கருளுக' எனப் பணித்தருளினர். அருள் வடிவாகிய அம்மையாரும் மங்கள நாயகி என்னும் பெயர் பூண்டு பெருமங்கள வடிவாய்த் தொழுதுருகும் அடியார்கட்குப் பெருவாழ்வருளி விளங்குகின்றார். அம்மையார் எழுந்தருளி யிருப்பது மந்திர சிங்காதனம். மந்திர பீடத்தில் இருப்பதால் மந்திர பீடேசுவரி எனவும் பெயர் பெறுவார் அவர். சிவபெருமான் தம்மைத்தாமே பூசித்துக் காட்டியமையை நான்முகக் கடவுள் கண்டார். விதிப்படி ஸ்ரீ ஆதி கும்பேசுவரரையும். ஸ்ரீ மங்கள நாயகியையும் நாடோறும் பூசித்து வருவாராயினர். மாசிப் பெருவிழாவை நடத்தினர். உலகெலாம் உய்யும் பொருட்டு இறைவனை வேண்டி வரங்கிடந்தார்.

அவ்வாறே பெற்றார். படைத்தலாகிய தொழிலையும் முன்பு போலப் பெற்றார். தமது சத்திய லோகத்தை யடைந்தார்.

## தீர்த்தங்கள்.

மேலே கூறியபடி அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒரு பகுதி கீழ்த்திசையில் தேங்கியது. அமுதவாவி என அது பெயர் பெற்றது. மற்றொரு பகுதி தென்கீழ்த்திசையில் தேங்கியது. அதற்கு அமுதசரோவரம் எனப்பெயர் கூறுவர். கங்கை முதலிய ஒன்பது புண்ணிய நதிகளும் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை குரு சிங்கராசியிலும், சந்திரன் கும்ப ராசியிலும் வரும் மாசிமகத்தில் அமுத சரோவரத்தில் விதிப்படி நீராடின. இறைவனை வழிபட்டன. தங்கள் குறையைப் போக்கிக்கொண்டன. கங்கை முதலிய கன்னியர் ஒன்பதின்மரும் நீராடித் தங்கள் குறையைப் போக்கிக் கொண்டமையால் அமுத சரோவரம் கன்னியர் தீர்த்தம் எனப்பெயர் பெற்றது. பன்னிரண்டு ஆண்டு கட்கு ஒரு முறை மாசிமகத்தில் அக்கன்னியர் நீராடிய மையால் மாமக தீர்த்தம் எனவும் அது பெயர் பெறுவ தாயிற்று. காசிபமுனிவர் இத்தலத்தையடைந்து காவிரித் துறையில் நீராடினர். ஸ்ரீ ஆதிகும்பேசுவரரை வழி பட்டார். தீவினையினின்று நீங்கிப் பேறுபெற்றார். அவர் நீராடிய இடத்திற்கு காசிபதீர்த்தம் எனப் பெயர்வழங்கு கிறது. திருவிழாக் காலங்களில் தீர்த்தங் கொடுத்தருள இறைவர் அங்கு எழுந்தருளுவர். அத்துறை ஸ்ரீ ஆதிகும் பேசுவரர் திருமஞ்சனப்படித்துறை எனவும் பெயர் பெறும். காமதேனு அக்காசிப தீர்த்தத்தில் நீராடியது.

ஸ்ரீ ஆதிகும்பேசர் வீற்றிருக்கும் இடத்துக்கு வட கிழக்கில் ஒரு தீர்த்தம் உண்டுபண்ணியது. அத்தீர்த்தத்தால் இறைவனைத் திருமஞ்சனமாட்டி விதிப்படி பூசித்துப் பேறுபெற்றது. அத்தீர்த்தம் 'காமதேனு தீர்த்தம்' எனக் கூபவடிவாய் விளங்குகிறது. முருகவேள் சூரபதுமன் முதலியோருடன் போர் செய்யச் செல்லுவதற்கு முன்பு இத்தலத்துக்கு எழுந்தருளினார். இக்கோயிலின் வடகிழக்குத்திக்கில் ஒரு தீர்த்தங்கண்டார். அத்தீர்த்தங் கொண்டு சிவபெருமானுக்குச் சிறப்பாகத் திருமஞ்சனம் செய்தார். விதிப்படி வழிபட்டார். அம்மையப்பருடைய திருவருளைப் பெற்றார். சூரன் முதலியோரை வென்றார். உலகை இன்புறச்செய்தார். இத்தீர்த்தம் கந்தகூவம்' எனப்படும். மங்கள சிவகங்கை எனவும் இதனைக்கூறுவர். அது இப்போது திருக்குளம் என வழங்கப்படுகிறது.

## இத்தலத்து வழிபட்டுப் பேறு பெற்றோர்.

(1) சண்டி என்பவள் அலகையால் நேரிட்ட துன்பம் நீங்கி முத்தி பெற்றாள்.

(2) இருதவன்மன், சுதன்மன், வீரவன்மன் முதலியோர் புத்திரப் பேறடைந்தனர்.

(3) சுலோசனை வேதாளம் நீங்கப்பெற்றாள்.

(4) ஞானவான், சுவர்ணரோமன், கருமசன்மன் முதலியோர் முத்திபெற்றனர்.

(5) மாந்தாதா சித்திரை விழாச் சிறப்புற நடத்திப் பேறு பெற்றான்.

(6) இந்திரன் பூசித்துப் புத்திரப் பேறுற்றான்.

(7) நான்முகக் கடவுள் பூசித்துப் பேறடைந்தார்.

(8) மூர்க்க நாயனார் முத்திப் பேறு அடைந்தார்.

## மூர்க்கநாயனர் வரலாறு.

"தொண்டை நாட்டிலே, திரு வேற்காட்டிலே, வேளாளர் குலத்திலே தலைமைபெற்ற ஒருவர் தினந்தோறும் சிவனடியார்களைச் சிவனெனை வணங்கித் துதித்துத் திருவமுது செய்வித்துப் பின்பு தாம் உண்பவரும், அவர்கள் விரும்பும் பொருள்களையும் கொடுப்பவருமாய் இருந்தார். இப்படி யிருக்குநாளிலே, அடியார்கள் அநேகர் எழுந்தருளி வருகின்றமையால், அவர் தம்மிடத்துள்ள திரவியங்களெல்லாம் செலவாகிவிட, அடிமை நிலம் முதலியனவற்றை விற்றும், மாகேசுரபூசையை வழுவாது மனமகிழ்ச்சியோடு செய்துவந்தார். அதன்பின், மாகேசுர பூசைச் செலவுக்குப் பொருள் இன்மையாற் கவலை கொண்டு, தாம் முன்னே பயின்ற சூதினாலே பொருள் சம்பாதிக்க நினைந்து, அவ்வூரிலே சூதாடுவோர் இல்லாமை பற்றி அவ்வூரை அகன்று, சிவஸ்தலங்கடோறுஞ் சென்று சுவாமிதரிசனம் செய்து, சூதாடலால் வரும் பொருளினாலே தம்முடைய நியதியை முடித்துச் சில நாளிலே கும்பகோணத்தை அடைந்தார். அங்கே சூதாடிப் பொருள் தேடி மாகேசுரபூசை செய்தார். சூதிலே முதலாட்டத்திலே தாம் தோற்று, பின் ஆட்டங்களிலே பலமுறையும் வென்று, அதனாலே பொருள் ஆக்கி, சூதிலே மறுத்தவர்களை உடைவாளை உருவிக் குத்தி, நற்சூதர் மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்றார். சூதினாலே வரும் பொருளைத் திருவமுது ஆக்குவோர்கள் கொள்ள, தாம் தீண்டார். அடியார்கள் திருவமுது செய்தபின், தாம் கடைப்பந்தியிலே அமுது செய்வாராயினர். இவர் இப்படிச் சிலகாலம் மகேசுரபூசை செய்து கொண்டிருந்து, அந்த மகத்தாகிய சிவபுண்ணியத்தினாலே சிவபதம்

அடைந்தார்.” ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெரியபுராண வசனம்.

## திருவிழாக்கள்.

சித்திரை விழா, ஏழூர்ச்சுற்று விழா (சப்தஸ்தான பல்லக்கு), திருக்கல்யாணவிழா, ஆடிப்பூரவிழா, பவித்திர விழா, விநாயக சதுர்த்தி விழா, நவராத்திரி விழா, ஸ்கந்தர் சஷ்டிவிழா, மார்கழித்திருவாதிரை விழா, மாசிமகப்பெரு விழா என்பன சிறந்தன.

## பஞ்ச பருவ விழா.

பிரதோஷம், கார்த்திகை, வெள்ளிக் கிழமை அமாவாசை, திருவாதிரை என்பன.

## நித்திய பூஜை.

திருவனந்தல், காலைச் சந்தி, உச்சிக் காலம், மாலைச் சந்தி, இரவு இரண்டாங் காலம், அர்த்த யாமம் என்பன,

## கல் வெட்டுக்கள்.

பழைய கல் வெட்டுக்கள் ஒன்றும் இக்கோயிலில் இல்லை. சாலிவாகன சகாப்தம் 1722-ல் உள்ள இரண்டு கல்வெட்டுக்களும், சகாப்தம் தெரியாத கல்வெட்டு ஒன்றும் உள. கல் வெட்டின் சில சிதைவுகள் ஆங்காங்குள.

I. “சாலிவாகன சகாப்தம் ௲எ௱உஉ (1722) ரௌத்திரி ௵ ஸ்ரீ ஆசார்யஸ்வாமிபி: நிர்மித: ஸ்ரீ காஞ்சி பீடாபிஷிக்த ஸ்ரீமஹா தேவேந்த்ர யதி உபயம்.” (இக்கல் வெட்டு துசஸ்தம்பத்துக்குத் தென்புறம் உள்ள தூணில் காணப்படுகிறது. ஷ துசஸ்தம்பத்துக்கு வடக்குப் புறம் உள்ள தூணில் ஷ தமிழ்க் கல்வெட்டில் உள்ள செய்தியைத் தெலுங்கு மொழியிலும் வெட்டப்பட்டுள்ளது.)

II. "சாலிவாகன சகாப்தம் ௧௭௨௨ (1722) துன்மதி ௵ கும்பேஸ்வர ஸ்வாமி ஸோமாஸ்கந்த மூர்த்திக்கு கர்பக்கிருகம், அர்தமண்டபம், மஹாமண்டபம் மூடுன்னு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப சந்திர மௌளீஸ்வர தாஸ பூத ஸ்ரீ மஹாதேவந்த்ர யதி தர்மம்."

(இது ஸோமாஸ்கந்த மூர்த்தி ஆலய அர்த்த மண்டபத்துத் தென் புறத்தில் உள்ளது.

III. "......விக்கிரம ௵ ஆடி மீ உ௰கஉ செவ்வப்ப நயக்க ஐயன் தர்மமாக திருவிலந்துறை புத்தர் கோயிலில் சித்த மார்மந்தார் நாயகர் நிலத்திலே திருமலை கோபுர பிரகாரங்கள் விசேஷ மகா ஜனங்கள் 'வாக்காலே வேண்டிக் கொள்ள திருப்பணி முடிந்தது."

(இது கைலாச கோபுர வாயில் தென்புறம் உள்ளது) கிராத மூர்த்தி ஆலயத்து நிலைக் கல்லிலும், பெரிய நந்தி எழுந்தருளியுள்ள இடத்துக்குத் தென்பால் உள்ள அறைக் கதவுகளின் சங்கிலி மாட்டிப் பூட்டும் மூலைக் கல்லிலும் சிதைந்த கல் வெட்டுக்கள் உள்ளன.

## சிற்பங்கள்.

இவ்வாலய கோபுரங்களில் சிறந்த வேலைப்பாடமைந்த பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இரண்டாவது ஆவரண மதிலின் வடபுறம், தென்புறங்களில் கிழக்குப்பகுதியில் சிற்பங்களமைந்த கொடு முடிகள் அமைக்கப்பட்டிக்கின்றன.

கோயில் தூண்களில் மிகச் சிறந்த வேலைப் பாடுள்ள உருவங்கள் உள்ளன.

நவராத்திரி மண்டபத்தின் முன் மேலே 27 நட்சத்திரங்களுடன் பன்னிரண்டு ராசிகளும் ஒரே கல்லில் செதுக்கப் பட்டு விளங்குகின்றன.

ஸ்ரீ மங்களாம்பிகை சந்நிதி மண்டபத்தில் பள்ளியறைக்கு எதிரில் மேலே ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் வரலாற்று முறைத் தொடர்ச்சி வாய்ந்த சிற்பங்கள் ஒரே கல்லில் சிறப்பாகச் செதுக்கப் பட்டுள்ளன.

## பொருளாதார நிலை

இந்த ஆலயத்துக்கு வெளியூர்கள் உள்பட 241 ஏக்கர் 2 செண்டு பரப்புள்ள நன்செய், புன்செய் நிலங்களும் பல மனைகளும் உள்ளன. இந்த நகரில் பல கடைக் கட்டிடங்களும், வீடுகளும், காய்கறி விற்கும் கடைகளும் உள்ளன. இவைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு சராசரி நெல் (4500) கலமும், 12000 ரூ ரொக்கமுமாக வருவாய் கிடைக்கிறது. தவிர, சென்னை அரசியலார் ஆண்டொன்றுக்கு 1989—12—10 பை நன்கொடை (மோகினி) யாக உபகரிக்கின்றனர். இவைகளைக் கொண்டும், உண்டிவசூல், பல சிவ புண்ணிய சீலர்கள் செய்து வரும் கட்டளை இவைகளைக் கொண்டும் ஆலய நைமித்திகச் செலவுகளும் அகத் தொண்டு புறத் தொண்டு செய்பவர் சம்பளச் செலவுகளும் நடைபெற்று வருகின்றன.

## திருப்பணி விவரம்

இவ் ஆலயம் யாரால் எப்பொழுது எடுப்பிக்கப் பட்டதென்பது தக்க சாதனங்களால் அறிய இயலவில்லை. எனினும், ஒரு சோழன் திருப்பணிகள் செய்தான் என்றும், இக் கோயிலே அன்றிப் பல கோயில்கள் எடுப்பித்தான் என்றும், அதனால் அவன் திருப்பணிச் சோழன் எனப் பெயர் பெற்றான் என்றும்,

அவ்வளவிலேயே திருக்குடந்தைப் புராணத்தால் அறிகிறோம்.

இனி, இவ்வாலயத்தை ஏறக் குறைய 80 ஆண்டு கட்குமுன்பு நிர்வாகம் செய்து வந்தவர்களும், சீரும் சிறப்புமாய் ஆலயத் தொண்டுகளைச் செய்வித்துப் புண்ணியமும் புகழும் ஒருங்கே கொண்டு வாழ்ந்தவர்களும் ஆகிய உயர் சைவத்திருவாளர் கோபு—நடராசச் செட்டியாரவர்கள் முற்ற வெளி விநாயகர் ஆலயந் தொடங்கிக் கீழ வீதிவரையில் உள்ள நடைக் காவணக்கல் மண்டபத்தைச் செய்வித்தனர். 2, 3 வது ஆவரணங்களில் செங்கல் தள்வரிசையும் போடுவித்தனர். ஆலய விழாக் காலங்களிலெல்லாம் இப்பொழுதும் பயன் படுத்தப் பட்டு வரும் வெள்ளி வாகனங்கள் முழுதும் அவர்கள் காலத்திலேயே செய்விக்கப் பெற்றுள்ளன. பற்பல பொன் திரு ஆபரணங்களும், கல் திருவாபரணங்களும் அவர்களால் செய்விக்கப் பெற்றனவேயாம்.

அதன் பின்பு, சென்ற 1810 ஆம் முதல் ஆலய நிர்வாகம் செய்துவந்தவர்களாகிய சைவத் திருவாளர்கள் கோபு, ந. குழந்தைவேல் செட்டியாரவர்கள், மு. சி. மு. துரைசாமி செட்டியாரவர்கள் பெரு முயற்சியால் சில திருப்பணிகள் செய்யப் பெற்று மகா கும்பாபிஷேகமும் நிறைவெய்தியது. பின்பு 1938-ஆம் த்தில் ஆலய நிர்வாக சிவ புண்ணியச் செயலை மேற் கொண்டவர்களாகிய உயர் திருவாளர்கள், D. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள், S. P. மதுரைவீரன் பிள்ளையவர்கள், V. கல்யாணம் ஐயர் அவர்கள் இவர்களுடைய அரிய முயற்சியாலும், இவர்கள் ஆட்சிக் காலத்தில் ஆலய மானேசராக இருந்து வந்த உயர்திரு C. D. கோபாலையரவர்கள் பெருந்துணையாலும்

பேருக்கத்தாலும் பல திருப்பணிகள் நடை பெற்றன. இராச கோபுரத்தின் உட்பகுதி நன்கு புதுப்பிக்கப் பெற்றது.

திருக் கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து 20-வது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் மேற்பார்வையில் 7-5-42 மஹா கும்பாபிஷேகமும் செய்விக்கப் பெற்றது.

கோவிலுக்குச் சொந்தமான நன்செய் புன்செய் நிலங்கள் மொத்தம் 241 ஏக்கர் 2 சென்ட். கோவில் நீளம் 750 அடி; ஷை அகலம் 252 அடி.

## ஆலய நிர்வாகம்

கி. பி. 1938 முதல் சென்னை H. R. E. போர்டா ருடைய ஆட்சியின் கீழ் இவ்வாலய நிர்வாகம் இருந்து வருகிறது. இப்போதுள்ள ஆலய நிர்வாகஸ்தர்கள்:—

டிரஸ்டிகள்:
1. திருவாளர் D. சொக்கலிங்க செட்டியாரவர்கள் B.A., B.L.
2. ,, S. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
3. ,, கோபு S. சாமிநாத செட்டியாரவர்கள்

H. R. E. போர்டு நியமனம் பெற்ற மானேசர்கள்:—

8-11-45 முதல்... P. M. முத்து மல்லா ரெட்டியாரவர்கள்
31-7-44 முதல் 27-9-45 வரை V.R. முத்துசாமிஐயரவர்கள்
9-7-38 முதல் 30-7-44 வரை, C. D. கோபாலையரவர்கள்

## இத்தலத்தைப் பற்றிய புராணங்களும் பிரபந்தங்களும்.

*I.* வட மொழியில் உள்ளவை:—

(1) பவிஷ்யோத்தர புராணம் க்ஷேத்திர வைபவ காண்டம்
(2) பிரமாண்ட புராணம்.
(3) ஸ்காந்த புராணம் முதலியன.

*II.* தமிழ் மொழியில் உள்ளவை:—

## தேவாரம்.

(1) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் தேவாரம், 2 ஆம் திருமுறை.

திரு க்ஷேத்திரக்கோவை ,, 3ஆம் திருமுறை.

(2) திருநாவுக்கரசு சுவாமிகள் ,, 5 ,, திருக்குறுந்தொகை

,, ,, 6 ,, திருத்தாண்டகம்

(3) க்ஷேத்திர வெண்பா ,, 11 ,, திருமுறை.

## புராணம்

(4) கும்பகோணப் புராணம் —தொண்டை நாட்டு 18 ஆம் நூற்றாண்டு முற்பகுதி அரசூர் சொக்கப் புலவர்.

(5) கும்பகோணப் புராணம் —அகோரமாதவர்.

(6) திருக்குடந்தைப் புராணம் —ஸ்ரீ மகாவித்வான், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

## பிரபந்தம்

(7) மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் ஷை

(8) குடந்தைத் திரிபந்தாதி ஷை

(9) கும்பேசர் குறவஞ்சி பாபநாசம் முதலியார்.

(10) குடந்தைக் கும்பேசுரர் மாலை

(11) குடந்தை வெண்பா (சிலேடை) யாழ்ப்பாணம் முருகேச பிள்ளை.

(12) மங்களாம்பிகை மாலை வி. சாமிநாத பிள்ளை.

## வசனம்

(13) திருக்குடந்தை மான்மியம் P. ஸ்ரீநிவாச ஐயர்.

## புலவர்களும் மஹான்களும்

பிரசித்தி பெற்ற காளமேகப் புலவர் இவ்வூரில் தோன்றியவர். அன்றி, 45 ஆண்டுகட்கு முன்பு ‘மௌன சுவாமிகள்’ என்னும் உயர்ந்த சிவஞானி ஒருவர் 25 ஆண்டுகள் உலக வாசனை சிறிதும் இன்றித் திகழ்ந்து சித்தி பெற்றனர்.

## கோயில் அமைப்பு விவரம்

கோயில் இந்நகரின் நடுவில் அமைந்துளது. அதன் நீளம் 750 அடி, அகலம் 252 அடி. இக்கோயில் நான்கு ஆவரணங்களுடன் விளங்குகிறது. மூன்று கோபுரங்கள் உள்ளன.

**முதல் ஆவரணம்:**—இது கைலாச கோபுரத்தின் உட்பகுதியில் அமைந்துளது. அப்பகுதியில் சைவ சமயாசாரிய சுவாமிகள் நால்வர், பதஞ்சலி முனிவர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், சப்த கன்னியர், பசு சிவவழிபாடு செய்தது, விநாயகர், சிவலிங்கம், சந்திரசேகரர், சுப்பிரமணியர், கார்த்திகேயர், சிவலிங்க மூர்த்திகள் மூன்று, கஜலட்சுமி, சரஸ்வதி, மஹாலட்சுமி, ஜேஷ்டை, ஆடிப்பூர அம்பிகை, விநாயகர், கிராத மூர்த்தி முதலிய திருவுருவங்கள் விளங்குகின்றன. இதன் நடுவில் எல்லாம் வல்ல இறைவராகிய ஸ்ரீ ஆதி கும்பேசுவரப் பெருமான் சிவலிங்க வடிவத்தில் எழுந்தருளியுள்ளார். இம் மூர்த்தியின் தென்பால் ஸோமாஸ்கந்த மூர்த்தியின் ஆலயமும், வடபால் மந்திரபீடேசுவரி ஆகிய ஸ்ரீ மங்களநாயகி ஆலயமும், ஸ்ரீ சண்டேசுவரர் ஆலயமும் தனித்தனி விளங்குவன. அம்பிகை ஆலயத்தின் வடகீழ்த்திசையில் பள்ளியறை உள்ளது.

### கார்த்திகேய மூர்த்தி

**தனிச்சிறப்பு:**—இந்த மூர்த்திக்கு ஆறு திருக்கரங்களே உள்ளன. வட இந்தியாவில் ஒன்று இரண்டு இடங்களைத் தவிர தென் இந்தியாவில் இக் கோயிலில், அன்றி வேறு எந்த இடத்திலும் இந்த மூர்த்தியைக் காண இயலாதென்னச் சொல்லுகின்றனர். இவர் ஆறு முகங்களும் ஆறு திருக் கரங்களும் உள்ளவர்.

பெயர்க்காரணம்:- கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப் பட்டமையால் கார்த்திகேயன் என்னும் பெயர் பெற்றார். கார்த்திகைப் பெண்களின் புத்திரர் அல்லர்.

ஆறு திருக்கரத்துளும் உள்ள ஆயுதங்கள்:—வலது திருக் கரங்கள் மூன்றனுள் கூர்மையான அழகிய வேலாயுதம், வாள், அபயம் என்பனவும், இடது திருக்கரங்கள் மூன்றனுள் வச்சிராயுதம், கேடகம், வரதம் என்பனவும் அமைந்துள்ளன.

வழிபாட்டின் பயன்:—நாடோறும் வழிபடுதலாலும், சிறப்பாகக் கார்த்திகை நட்சத்திரம், சஷ்டி திதிகளில் விதிப்படி வழிபடுதலாலும், அன்பர்கட்குப் பிணி, பகை, பயம் முதலியன நீக்கி இம்மை மறுமைப் பேறுகளைத் தரும்.

இரண்டாம் ஆவரணம்:— இந்த ஆவரணத்தில் ஆலயங்கள் அல்லது மூர்த்திகள் ஒன்றுமில. இதில் தென்கிழக்கில் மடைப்பள்ளியும், வடகிழக்கில் வேள்விச் சாலையும் உள்ளன.

மூன்றாவது ஆவரணம்:—இது இராச கோபுரத்துக்கு உட்பட்ட பகுதியாம். இதில் தென்மேற்கில் ஆதிவிநாயகர் வீற்றிருந்தருளுகின்றார். வடமேற்கில் வில்வ நிழலில் சிவலிங்க மூர்த்தியும், மேலைப்பிராகார நடுவில் மேற்கு முகமாக தண்டபாணி கோயிலும் (குமாகோட்டம்), வடக்கில் திருக்கல்யாண மண்டபமும் அதன் கிழக்கில் சட்டைநாதர் ஆலயமும் உள்ளன.

நான்காவது ஆவரணம்:— திருவெளி வீதியாகும். இவ்வெளி வீதி மதிலில் நாற்றிசையிலும் கோபுரங்கள் உள்ளன. தெற்குக் கோபுரம் அபூர்த்தியானது.

மேற்கூறிய திருக்கல்யாண மண்டபத்தில் ஆண்டு தோறும் திருக்கல்யாண விழா நடைபெறும். அம்மண்டபத்திலேயே ஸ்ரீ மங்களாம்பிகா விலாச நூல் நிலையம் நூற்றுக்கணக்கான புத்தகங்களுடன் விளங்குவது. பலர் படிக்கின்றனர். நாடோறும் சென்ற 1942 ஆண்டு முதல் ஆலய நிர்வாகிகளின் நன் முயற்சியால் மாலையில் சைவ சித்தாந்த உபந்நியாசங்கள் செய்விக்கப் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது. தெற்குக் கோபுரத்துக்குக் கீழ்புறத்தில் ஒரு திரு நந்தவனம் உண்டு.

திருச்சிற்றம்பலம்

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங் குருநன் னகரான்
நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞான சம்பந்த னல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர் தமிழ்பத்தும் வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்து வர்வீ டெளிதே.

திருச்சிற்றம்பலம்.

உ

# திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

## ஐந்தாந்திருமுறை

## 22. திருக்குடமூக்கு திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. 1

பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டியுறை யுங்குட மூக்கிலே. 2

நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யாளவள் கன்னி யெனப்படும்
கொங்கை யாள்உறை யுங்குட மூக்கிலே. 3

ஓதா நாவன் திறத்தை யுரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் மியமுனை
சேதா ஏறுடை யானமர்ந் தவிடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே.

நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுறை வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே. 5

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்ட எங்
குறவ னார்உறை யுங்குட மூக்கிலே. 6

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே. 7

காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும் உறை யுங்குட மூக்கிலே. 8

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னார்உறை யுங்குட மூக்கிலே. 9

அன்று தானரக் கன்க யிலாயத்தைச்
சென்று தானெடுக் கஉமை அஞ்சலும்
நன்று தான்நக்கு நவ்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. 10

திருச்சிற்றம்பலம்.

உ

## திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## மூன்றாம் திருமுறை

---

### 59 திருக்குடமூக்கு: பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

---

அரவிரி கோடனீட லணி காவிரி யாற்றயலே*
மரவிரி போதுமௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே. 1

ஓத்தர வங்களோடு மொலி காவிரி யார்த்தயலே
பூத்தர வங்களோடும் புகை கொண்டடி போற்றிநல்ல
கூத்தர வங்களோவாக் குழகன்குட மூக்கிடமா
எத்தர வங்கள்செய்ய இருந்தானவ னெம் மிறையே. 2

மயில்பெடை புல்கியால மணல் மேல்மட அன்னமல்கும்
பயில் பெடை வண்டுபண் செய்பழங் காவிரிப்பைம் பொழில்
குயில்பெடை யோடுபாட லுடையான் குடமூக்கிடமா [வாய்க்
இயலொடு வானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 3

மிக்கரை தாழவேங்கை யுரி யார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமையேன மருப் போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடை யான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேத்த இருந்தானவ னெம்மிறையே. 4

வடிவுடை வாட்டடங்கண் ணுமை யஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூட வுரி கொண்டவன் புன்சடையான்
கொடி நெடு மாடமோங்கும் குழகன்குட மூக்கிடமா
இடி படுவானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 5

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ் காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின் நல்ல பலவின்கனி கள்தயங்கும்
குழைவளர் சோலை சூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடு மிருந் தானவ னெம்மிறையே. 6

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந் தானெழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத்தான்புர மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந்தானவ னெம்மிறையே. 7

நெடுமுடி பத்துடைய நிகழ் வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பரு மால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்கு தெங்கு பழம் வீழ்குட மூக்கிடமா
இடுமண லெக்கர்சூழ இருந்தானவ னெம்மிறையே. 8


ஆரெரி பாழியானு மல ரானு மளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம் பாமதி சூடி நல்ல
கூரெரி யாகிநீண்ட குழகன்குட மூக்கிடமா
ஈரிரு கோவணத்தோ டிருந் தானவ னெம்மிறையே. 9

மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந் தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடை யான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந் தானவ னெம்மிறையே. 10


வெண்கொடி மாடமோங்கு விறல் வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ் ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடி சேர்தமிழ் பத்தும் வல்லார்
விண்புடை மேலுலகம் வியப் பெய்துவர் வீடெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

THE M. L. J. (BRANCH) PRESS TIRUPUVANAM. T.D.R. C. 1500



திருக்குளம்.



தெற்குக் கோபுர வாசல்.